செ.கு. எண்: 351

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.9.2012

சென்னை, அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S. லட்சுமிபதி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N. பொன்முடி அவர்கள் 9.9.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 26.9.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.திருமேனி அவர்கள் 26.9.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. லட்சுமிபதி மற்றும் திரு. பொன்முடி, முதல் நிலைக் காவலர் திரு. திருமேனி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. S.லட்சுமிபதி மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. S.திருமேனி, சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. N. பொன்முடி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9